**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 13-09-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-13 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-09-14 | 2022-09-15 | 2022-09-16 | 2022-09-17 | 2022-09-18 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 8.0 | 0.0 | 0.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 34.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 26.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 70 | 70 | 75 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 60 | 60 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 160 | 160 | 160 | 180 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 4 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

செப்டம்பர் 17 மற்றும் 18 வரை இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.1°C - 37°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.8°C - 24.5°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12.1-15.4 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் காய்கறி மற்றும் பழ மரங்கள், பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர்பார்க்கும் மழையைப் பயன்படுத்தி மேலுரம் இட்டு மண்அணைக்க திட்டமிடலாம்.

## குறுஞ்செய்தி :

எதிர்பார்க்கப்படும் மழை பயன்படுத்தி பயிர் விதைதுள்ள விவசாயிகள் பாடுவாசி உள்ள இடங்களில் மறுவிதைப்பு செய்யவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | கடந்த வாரம் பெய்த மழை மற்றும் தொடர்ந்து தேவையான பருவமழை மழை அளவு தக்கதருணத்தில் எதிர்பார்க்ப்டுவதால். புரட்டாசிப்பட்டம் மானாவாரி மக்காச்சோளம் விதைக்க நிலம் தயார்படுத்தலாம். ஒரு எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது மக்கியதொழு உரம் அல்லது மக்கிய தேங்காய் நாரைச் சமமாக கடைசி உழவிற்கு முன் சீராக இட்டுட், அதனுடன் 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் கலந்து பரப்பி நன்கு உழவு செய்யவும். நல்ல தரமுடைய விதை களை தேர்ந்தெடுக்கவும். வீரிய ஒட்டு இரகங்களுக்கு 20 கிலோ, எக்டர் என்ற அளவிலும் இரகங்களுக்கு 25 கிலோ, எக்டர் என்ற அளவிலும் பின்பற்றவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவனத்திற்கு தென்னையில் குறும்பை அழுகல் நோயை கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள் தற்போது நிலவி வரும் தட்பவெப்பசூழ்நிலையில் குறும்பை அழுகல் நோய் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம், தென்னங்கன்றுகளுக்கு ஊற்றவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது பெய்துள்ள மழையின் காரணமாக பசுந்தீவனம் மிகுதியாக கிடைக்கும் எனவே பசுந்தீவனத்தை கால்நடைகள் அதிகமாக உண்ணும் வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக வயிற்றுப் போக்கு மற்றும் அசிடோசிஸ்நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அதிகம், விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தை குறைத்து அதிக அளவிலான உலர் தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வேளாண் நிலம் | கடந்த சில நாட்களில் மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர்களின் சத்துகள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும் ஆதலால் தழைச்சத்து உரங்க களை வேப்பம் புண்ணாக்கு கலந்து அல்லது தார்கலந்து இடவேண்டும் . இதனால் சத்துக்கள் உபயோகிப்பு திறன் அதிகமாக இருக்கும். |